Registered as a News Paper in Ceylon
P M G. No. H A 59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28 ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரஹு ஐப்பசிமீ உ௩ உ வெள்ளிக்கிழமை (9 நவம்பர் 1951) [இல. - ௹௬]

## சிவஞானபோதச் சொற்பொழிவு

— திரு. V. P. காந்திமதிநாதபிள்ளை அவர்கள் —

( முற்றொடர் )

மூன்றாம் சூத்திரம்

உளது இலதென்றலின்,
எனதுட லென்றலின்,
ஐம்புலன், ஒடுக்கம்
அறிதலின், கண்படில்
உண்டிவினை யின்மையின்,
உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திர
தனுவினுள் ஆன்மா

உயிர் உண்டு

உயிர்கள் மாறிமாறி இறத்தல் பிறத்தல் புரியுமென்றோம். இறத்தல் பிறத்தல் புரியும் அவ்வுயிர்களோடு முதல்வன் அத்துவிதமாய் நிற்பனென்றுஞ் சொன்னோம். ஆனல் உயிரென்பதோர் பொருளுண் டென்பதற்கும் அவ்வுயிர் யாது என்பதற்கும் எவ்வித ஏதுவுங் கூறவில்லை. அவ்வுயிருண்மையை உணர்த்தும் ஏதுக்களை இச்சூத்திரத்து ஆராய்வாம். உயிர் அறிவுப் பொருளாதலால் அதனை நாம் கண்ணால் அறியமுடியாது. நம்மாற் கண்ணால் அறியவரும் பொருள்கள் சடப்பொருள்களே. இச்சடப் பொருள்களின்பால் உயிர் உண்டென்பதை உணர்த்தும் ஏதுக்கள் உளவா என்பதே நாம் ஆராய வேண்டுவது. இவ்வுலகில் நாம் காணும் சடப் பொருள்கள் இரு திறப்படும். இவற்றுள் ஒரு திறத்துச் சடப்பொருள்களில் எக்காலத்தும் எவ்வித அறிவும் விளங்குவதில்லை. இவையாவும் தனித்த சடம். இதுவன்றி மற்றொரு திறத்துச் சடப் பொருள்களில் யாதானும் ஓர்விதத்தி லறிவு விளங்கி நிற்பதை நாம் அறிவோம். இத்திறத்துப் பொருள்களையே உயிருடைய பொருளக ளென்கிறோம். இவற்றின் கண் உயிருளதா என்பதை ஆராய்வாம்.

யாதாயினும் ஓர் அறிவு விளங்கும் பொருளைக் கூறுபடுத்திச் சோதிக்கில் அதன் ஓர் கூற்றிலாவது அறிவின் விளக்கத்தை நாம் காணுவதில்லை. அதன் ஒவ்வொரு கூற்றையும் இது உயிரன்று; இது உயிரன்று என்றே கழிப்போம். இப்படியே எந்த அறிவு விளங்கும் பொருளையும் கூறுபடுத்திச் சோதிக்கில், அததன் ஒவ்வொரு கூறையும் இது உயிரன்று இது உயிரன்று எனறே கழிப்போம். இதனால் உலகில் உயிரில்லையென்றே சொல்லலாமா? ஒவ்வொரு கூற்றையும் மேற் சொலலியவாறு கூறுபடுத்தி இது உயிரன்று இது உயிரன்று என்று கழிக்கிறபொருள் அறிவுப் பொருள்தானே. அதுவுமில்லையெனில், அவ்வாறே கூறுபடுத்தலும் கழித்தலுமில என்றனரே முடியும். ஆதலால் இவ்வாறு கூறுபடுத்திக் கழிக்கும் பொருள் ஒன்று உண்டே; அதுதான் அறிவுடைப் பொருள். அதுதான் உயிர். இவ்வுயிர் அறிவு விளக்கமுள்ள பொருளதோறும் உண்டு. அதாவது உலகப் பொருள்களிற் சேதனம் அல்லது சித்து என்னும் வகுப்பிற் சேரும் ஒவ்வொரு பொருளிலும் உயிர் உண்டு; அறிவு பெருகிய பொருளிலும் உண்டு; அறிவு சிறுகிய பொருளிலுமுண்டு. அறிவு விளங்கிய பொருளிலும் உண்டு: அறிவு மழுங்கிய பொருளிலுமுண்டு. மனிதர்கட்கு முண்டு. மிருகங்கட்குமுண்டு; தாவரங்கட்குமுண்டு. சங்கமங்கட்குமுண்டு; எந்தப் பொருளிலேனும் யாதானும் ஒரு காலத்து எவ்விதத்தானும் அறிவு விளங்கில், அதை உயிருடைப் பொருள் என்னலாம். ஆகவே உயிர்கள் எண்ணில என்பது பெறப்படும். இக் கருத்தினையே இச்சூத்திரம், 'இலது என்றலின் ஆன்மா உளது' என இயைபுற உணர்த்தும்.

உயிர் தங்குவது உடலினுள்

உலகென்பதோர் பொருள் உண்டென்றும் அதனைச் சடப்பொருளோடு கூடி விளங்கி நிற்கக் காணலாமென்றுஞ் சொன்னோம்.

அவ்வாறு சடப்பொருளோடுகூடி விளங்கும் உயிர் எங்கேயுள்ளது? அச்சடத்தி னுள்ளேயா? வெளியேயுமா? என்பதையு மாராய்வாம். இவ்வுலகிலுள்ள சடப் பொருள்களெல்லாம் மாயா காரியங்களென்று சொன்னோம். இவற்றுள் எதெதில் உயிரின் விளக்கமுண்டோ அது அது உடல் அல்லது 'தநு' எனப்படுமென்றும் சொன்னோம். இவ்வுடலினும் உயிரின் விளக்கம் எப்போதுமில்லை. ஏனைச் சடப் பொருள்கள்போல இவ்வுடலும் ஒரு காலத்துக் கெட்டொழிவதே. அவ்வாறு கெட்டொழியும்போது இவ்வுடலின்கண் உயிரின் விளக்கம் சிறிதுமில்லாது நின்றுவிடும். அதுகாறும் இவ்வுடலின்கண் நிகழ்ந்த எவ்வித இயக்கமும் அப்பால் நின்றுவிடும். எனவே இவ்வுடல் கெட்டொழியும்வரை அதன்கண் நிகழ்ந்த இயக்கங்கள் யாவும் உயிரின செயல்களேயாய் முடியும். எப்படி ஓர் இயந்திரம் ஒருவனால் இயக்கப் படுமோ அப்படியே இவ்வுடல் உயிராலியக்கப்படும். இதுபற்றியே இவ்வுடலை இச்சூத்திரம 'இயந்திர தனு' என்றோதியது.

இவ்வாறு உடலை இயக்கும் உயிர் எங்கே தங்கியுள்ளது? என்பதே ஈண்டு ஆராயவேண்டியது, உயிர் உடலுக்கு வெளியேயும் தங்கி நிற்பதானால், அவ்வாறு எப்போதுந் தங்கி நிற்பதால், அவ்வுடலின் இயக்கம் நின்றவிட அது பிணமாய்க் கெட்டொழியக் காரணமில்லை. அன்றியும் ஒவ்வோர் உயிரும் ஒவ்வோர் உடலையே இயக்கவேண்டுமென்பதுமில்லை. ஆனல் ஓர் உடல் கெட்டொழிய மற்றோருடல் நிற்பதை நாம் நேரே அறிவோம். எனவே ஒவ்வோருயிரும் ஒவ்வோருடலையே இயக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆதலால் உடலுக்கு வெளியே உயிர்க்கு வியாபகமில்லை யென்றே பெறப்

தொடர்ச்சி 3-ம பக்கம்

## உ
## தோத்திரம்

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்

கொடிகொள் செல்வ விழாக்குணலையருக்
கடிகொள் பூம்பொழிற் கச்சியே கம்பனூர்
பொடிகள் பூசிய பூந்துருத் திநகர்
அடிகள் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

ஒருத்த னுயுலகே மூக்தொழுகின்ற
பருத்த பாம்பொடு பான்மதி கங்கையும்
பொருத்த னுகிலும் பூந்துருத் திநகர்த்
திருத்தன் சேவடிக் கீழ்நா மிருப்பதே.

திருச்சிற்றம்பலம்

— அப்பர் சுவாமிகள்.

— அகில இலங்கைத் —

## தமிழ் எழுத்தாளர் சங்கம்

இலங்கை எழுத்தாளர்களின்கூட்டமொன்று பார்லிமெண்டு அங்கத்தினர்களின் விடுதியான "ரசவனதி" யில் சென்ற சனிக்கிழமை (3-11-51) மாலை 5 மணிக்கு ஆத்மஜோதி ஆசிரியர் ஸ்ரீ க. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்ப்பத்திரிகைகளைச் சேர்ந்தவர்களும் தனிப்பட்ட எழுத்தாளர்களுமாக அநேகர் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். கூட்டத்தின் நோக்கங்களை ஸ்ரீ கே கணேசு எடுத்துரைத்தபின்னர் எழுத்தாளர்களே உலகத்தை ஆள்பவர்களென்றும் கொந்தளிக்கும் உலகில் நிரந்தரமான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நிலவச் செய்ய எழுத்தாளர்கள் வெகுதூரம் சேவை புரியமுடியுமென்றும் தலைவர் ஸ்ரீ க. இராமச்சந்திரன் குறிப்பிட்டார். ஸ்ரீ கே. பி. ஹரன் பிறகு பேசிய பொழுது இலங்கையில் பத்திரிகையாளர்கள் சங்கமொன்று தோன்றியிருப்பதைச் சுட்டிக்காட்டி, எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவாக அந்த ஸ்தாபனம இருந்தபொழுதிலும் தமிழ் எழுத்துக்களுக்காக தமிழ் சமூக நலனுக்காக பாடுபடவும் தமிழ் எழுத்தாளர்கள் அடிக்கடி ஒருவரை ஒருவர் சந்தித்து அளவளாவவும் பிரத்தியேகமான ஒரு சங்கமிருப்பது மிக அவசியமென்பதை வலியுறுத்தினர். அரசாங்க தேர்தல் தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீ அ. ச. சுப்பிரமணியம் பிறகு பேசியபொழுது தமிழ்இனம் இன்று தனது கலையிலும் பண்பாட்டிலும் அடைந்துள்ள கேவல நிலைமையைச் சுட்டிக்காட்டி தமிழ் இனம் கடைத்தேற தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றி சேவை புரியவேண்டுமென்றார். தமிழன் எங்கிருந்தாலும் ஒரே இனத்தவனென்றும் அவனுக்கு தேச ஜாதி பேதம் கிடையாதென்றும அவர் மேலும் பேசுகையில் சொன்னார்.

"ஒற்றுமையில்லை விடில் பாவில்லை"

தெல்லியூர் திரு. செ. நடராஜா சங்க அவசியத்தையும, அதன் அமைப்பில் ஏற்படக்கூடிய விக்கினங்களையும் லட்சிய பாதையில் இடையூறுகளைத் தவிர்த்துக் கட்டுப்பாடுடன் செல்லவேண்டிய அவசியத்தையும்பற்றிக்குறிப்பிட்டார். எழுத்தாளர் என்றால் யார்? எழுத்தாளர் சங்கத்தில் யார் யார் சேரலாம் என்பதைக் குறித்துச் சிறிது நேரம் பொதுவான விவாதம் நடந்தது.

ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ் பிறகு பேசியபொழுது இப்பொழுது இப்பொழுது நடைபெறும் கூட்டத்தையே எழுத்தாளர் சங்க ஆலோசனைக் கூட்டமாக மதிக்க வேண்டுமென்றும், சங்கத்தை நிறுவவும், சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கவும் வேறொரு கூட்டமொன்று நடத்தவேண்டுமென்றும் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், எல்லாப் பத்திரிகைகளுடைய பிரதம ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் ஆசியுமில்லாமல் சங்கம் கூட்டிப்பயனில்லையென்றும் அவர்களது உதவியை நாடவும், அவர்கள் மூலமாகத் தனிப்பட்ட எழுத்தார்களின் ஒத்துழைப்பைக் கோரவும், சங்கத்துக்கு தற்காலிகமான ஒரு அமைப்புதிட்டத்தை தயாரித்து அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கவும் ஒரு நிருவாகசபையை நியமிக்க வேண்டுமென்றும் யோசனை கூறினர். மேற்படி யோசனையை ஆசிரியர் திரு. கி. மே. யோ. வேதநாயகம் ஒரு தீர்மானமாகப் பிரேரிக்க, அத்தீர்மானம் திரு. எல். சுந்தரத்தினுல் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது. ஜனுப். எல். இப்ராஹிம தீர்மானத்தைப் ஆதரித்துப் பேசினர். கீழ்க்கண்டவர்கள் நிருவாக சபை அங்கத்தினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

நிருவாகசபை அங்கத்தினர்கள்

திருவாளர்கள் க. ராமச்சந்திரன் (தலைவர்) அ. ச. சுப்பிரமணியன், (காரியதரிசி) கி. ம. யோ. வேதநாயகம், எல். இப்ருஹிம், கே. கணேஷ் என். கந்தஸ்வாமி, டி. ராமானுஜம், (எம். பி.) இக் கமிட்டியினருக்கு பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களுடைய உதவியைக் கோரி அவர்களையும் நிர்வாகசபையிற் சேர்த்துக்கொள்ளும் அதிகாரமும் அளிக்கப்பட்டது. ஸ்ரீ ராமானுஜம் பிறகு பேசியபொழுது, எழுத்தாளர் சங்கத்தில் அரசியல் சம்பந்தமே கிடையாதென்று கூறித் தவறான பல அபிப்பிராயங்களுக்கும் தகுந்த சமாதானம் கூறினர். எழுத்தாளர் சங்கம் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வளவு சிறப்பாகச் சேவை புரிய முடியுமென்பதையும் சுட்டிக்காட்டிய பின் திரு. அ. ச. சுப்பிரமணியன் வந்தோருபசாரமகூற ஸ்ரீ டி. ராமானுஜம் அளித்த சிற்றுண்டி விருந்துபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

— நிருபர்.

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஞு ஐப்பசி மீ உகூ வ வெள்ளிக்கிழமை

## அரசாங்க விடுமுறைத் தினத் திருத்தம்

அரசாங்க (பகிரங்க) விடுமுறைநாட்களில் உள்நாட்டு மந்திரி செய்துள்ள திருத்தங்களைச் சென்ற செவ்வாய்க்கிழமைப் பிரசுரத்திலே தொகுத்து வெளியிட்டிருந்தோம்; இத் திருத்தம் இலங்கையிலுள்ள எச்சாதியினர்க்கும் எம் மதத்தினர்க்கும் சம்மதமானதென எண்ணலாகும்; அதிகாரிகள் இங்குள்ள பல சமய வாதிகளையுஞ் சாதியினரையும் ஒரு அளவிற்கு முக்கியே உசாவியறிந்தே இத் திருத்தத்தைப் பிரேரிக்க லாயினர்; இத் திருத்தம் முறைப்படி பாராளுமன்றக் கூட்டத்தில் விரைவிலே அங்கீகாரம் பெற்று நிறைவேறுமென்றே யெண்ணுகின்றேம்.

இதுகாறும் இந் நாட்டிலே கைக்கொள்ளப்பட்டு வரும் விடுமுறைநாட்கள், இந்நாட்டையாண்ட அந்நிய சாதியினரால், ஆளப்பட்ட சாதியினராகிய இலங்கை வாசிகளின் மதக்கொள்கைகள் சாதியாசாரங்கள் முதலியவற்றை உசாவிச் செய்தலின்றி, அரசினராகிய தாம் அநுட்டித்து வந்த மதத்திற்கேற்பப் பெரும்பாலும் வகிக்கப்பட்டனவெனலாம்; இதனற்றான் கிறீஸ்து மார்க்கத்தினர்க்குரிய அரசினர் விடுமுறை நாட்கள் மிக அதிகப்பட்டுவழங்கலாயின. விடுமுறை நாட்கள் மாத்திரம் அதிகப்பட்டதோடு நின்றுவிடவில்லை; இங்குள்ள ஏனையசமயத்தினர்க்கு விசேஷமற்றதாய், வாரத்தின் முதனளாயுள்ள தான ஞாயிற்றுக்கிழமை ஆண்டு முழுவதும் விடுமுறை நாளாக அகில இலங்கையிலும், பறங்கியர் பரிபாலனை காலந் தொட்டு இன்றும் விடுமுறைநாளாகக் கொள்ளப்பட்டு வருதல், கிறீஸ்துவ மக்களின் சௌகரியத்தை யுத்தேசித்தேயாகு மென்பதை இங்குள்ள அம் மதத்தினரும் ஒத்துக்கொள்வர். இந் நாட்டிலுள்ள கிறீஸ்துவர்களைக் காட்டிலும் தொகையில்அதிகப்பட்ட இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும வெள்ளிக்கிழமையே சமயசம்பந்தமான விசேஷ தினமாக விருப்பவும், ஞாயிற்றுக்கிழமைகளை விடுத்து ஆண்டு முழுவதிலும் வரும் வெள்ளிக்கிழமையை விடுமுறை நாளாக்க வேண்டுமென்றேனும், இல்லையேல் வாரத்தின இறுதித்தினமாகிய சனிக்கிழமைகளை விடுமுறைநாளாக்கவேணுமென்றேனும் இங்குள்ள அதிகாரிகள் எவரும்இப்பொழுதுசிந்திக்கவில்லை; எவரும் அப்படி மாற்றியேயாகிவிடவேண்டுமென்று இப்போதுசொல்லவில்லை. எம்மதத்தினரதும் மனத்தைப் புண்படுத்தாமற் காலகதியில் அம் மாறுதலைச் செய்யலாகுமென நினைத்தலே பெருந் தன்மையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதனையெடுத்துக் காட்ட வேண்டி நேர்ந்த காரண மென்னையெனில், கிறீஸ்தவ அன்பர்கள் சிலர், அரசாங்க விடுமுறைநாள் விஷயத்திற் புதிய திருத்தம் தங்கள் மதத்தினரைப் பாதிக்கிறதெனக் குறைகூறத் தலைப்பட்டமையேயாகும்; புதிய முறைப்படியும், இந் நாட்டிற் பெருந் தொகையினரா யுள்ள இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் விசேட விடுதலைநாட்கள் தனித்தனி நன்னான்காக, கிறீஸ்தவர்கட்கு ஐந்தாகின்றன; இவற்றோடு ஆண்டில் நிகழும் 52. ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டினைக் கழித்து 50 ஞாயிற்றுக் கிழமைகளையும் குறித்த 5 நாட்களுடன் சேர்த்துக்கொண்டால், கிறீஸ்தவர்கட்குரிய விசேட விடுமுறை நாட்களின் தொகை ஐம்பத்தைந் தாகுமே!

இனி, புதியவிடுமுறைத்தினத் திட்டத்திலுள்ள விசேஷம் அந் நாட்களுட்பல, குறித்த குறித்த சமயத்தினர்க்குத் தெய்வ வழிபாட்டிற்கும் விரதங் காத்தற்கும் பயன்படுவன; இதுகாறுமிருந்தவாறு உண்டாட்டுக் களியாட்டிற்குரியனவல்ல; தமிழர் -சிங்களர் சித்திரை வருடப் பிறப்பு நாட்கள் இருபகுதியார்க்கும் புதுவருடக் கொண்டாட்டத்திற்கு உபயோகப்படுவதோடு இலங்கை மக்களனைவரும், சமீபத்திலுள்ள ஊர்கட்குப் பிரயாணஞ் செய்தல், தங்கள் சமயம் கல்வியென்னுமிவை விஷயமாகப் பிரசாரணஞ் செய்தல், சனசமூக நன்மையை யுத்தேசித் துழைத்தல் முதலியவற்றின் பொருட்டுப் பயன்படத்தக்கன. சைவ மக்களுக்குரிய தைப்பொங்கல் விடுமுறை நாள் சூரிய பொங்கல், தான தருமம், ஆலய வழிபாடு முதலிய சற்கருமங்களைச் செய்தற்குரியது; மகா சிவராத்திரி; சிவ விரதங்களுட் சிறந்ததாகிய சிவராத்திரி விரதத்தை யநுட்டித்தற்கும், பக்குவிகள் நான்கு யாமமுஞ் சிவபூசை செய்தற்கும், சுவாமி தரிசனஞ் செய்தற்கும், சிவபுராணப் படிப்புக் கேட்டும் சற்பிரசங்கங்கள் கேட்டும் தூயமுறையில் இராக்காலத்தைக் கழித்தற்கும், அதிகாலையிற் புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிச் சிவனை வழிபட்டு விதிப்படி பாரணம்பண்ணி ஏழைகட்கு அன்னதானஞ் செய்தற்கும், பகற் காலத்தை நித்திரை கொள்ளுதலின்றித் தூய முறையில் உபயோகித்தற்கும் உரியதாகும்; சிவராத்திரி விடுமுறை நாள், சிவராத்திரியின் முற்பகலில் விடுவதோ இன்றேல் தீர்த்த ஸ்நானம் பாரணம் முதலியவற்றோடு கூடிய அடுத்த நாட் பகல் விடுவதோ என்ற விஷயத்தில் இங்கே அபிப்பிராய பேதமுண்டு; தீபாவலி விடுமுறை நாளையும் இந்துக்கள் உண்டாட்டுக் களியாட்டிற்குரிய தினமாகக்கழித்தலின்றி, ஆலய வழிபாடு முதலிய தெய்வ வழிபாட்டிற்கும் தான தருமஞ் செய்தற்கும் ஆகிய நாளெனக் கழிப்பதே முறையாகும்.

இங்ஙனமாக, இதுகாறும் விசேட விடுமுறை நாள் அளிக்கப்பட்டுவந்த கிறீஸ்தாப்த புத்தாண்டிற்குரிய ஒரு வார விடுமுறைநாளைத் தவிர்த்து, சிங்கள தமிழர் புதுவருடப் பிறப்பிற்கு 5 நாள் உதவப்பட்டமை இலங்கை மக்களில் தொகையிற் கூடிய சிங்கள தமிழ் மக்களுக்குரிய புதுவருடப் பிறப்பென்ற காரணம்பற்றியாகும்; ஆனல் இனிமேலாயினும் சிங்கள தமிழர் கிறீஸ்தாப்த ஆண்டுக்குரிய தேதிகளோடு தங்கள் வருடத்திற்குரிய தேதிகளையுஞ் சகல சாதனங்களிலும் இட்டு அன்றன்று வாழ்க்கை முறையிற் கைக்கொண்டு வருவார்களோ எனக் கேட்கின்றேம்; தமிழர் தமிழ்வருடத் தேதியையும், சிங்களர் சிங்களவருடத் தேதியையும் தாங்கள் எழுதுங் கடிதங்கள் ஏனைய சாதனங்களிலும் புதினப் பத்திரிகை முதலியவற்றிலும் இட்டு அதற்கொத்த கிறீஸ்து ஆண்டுத் தேதியையும் இடலாம். தென்னிந்தியாவிலும் இந்த இலங்கையிலும் தமிழராலாக, ஏனைய இந்துக்களாலாக ஆங்கிலத்தில் நடத்தப்படும் எந்தப் புதினப்பத்திரிகையிலும் கிறீஸ்தாப்த தேதிகள் இடப்பட்டு வருகின்றனவே யொழிய தமிழ் வருடத் தேதிகள் இடப்படுதல் இல்லை யெனலாம்; சிங்களவர் விஷயமும் இப்படியேயாகும்; ஆனல் வட இந்தியாவிலே வெளிவரும் பழைய சிறந்த "அமிர்தபஸார்" பத்திரிகை போன்ற இந்துப் பத்திரிகைகள், ஆங்கில மொழியில் வெளிவருகின்றன வெனினும், கிறீஸ்த ஆண்டுத் தேதிகளுடன் வடநாட்டிற்குரிய இந்து ஆண்டின் தேதி முதலியன தவருது இடப்பட்டே வெளிவருகின்றனவாகும்; இவைகளெல்லாம் சாதி சமய அபிமானத்தைப்பொறுத்தனவாம்.

## இணுவில் கிராம முன்னேற்றச் சங்கம்

ஷை சங்கத்தினரின் நிருவாக சபையாரும், உடுவில் கிராமச்சங்க நிருவாக சபையாரும் சேர்ந்து காங்கேசன் துறைப் பெருந் தெருவிலிருந்து இணுவிற் புகைரத வீதிவரை ¾ மைல் நீளமுள்ள ஒரு ஒழுங்கையைத் தோட்ட நிலங்களூடாக, வலி—வடக்குக் காரியாதிகாரியின் முகாமையில் திறந்து வைத்தார்கள்.

—நிரு.

## நகரபரிபாலன சபைத் தலைவர்களின் உத்தியோககாலம்

தல ஆட்சி மந்திரியாகவும், இப்போது கடமையாற்றி வரும் பிரதம மந்திரி நகர பரிபாலன சபைத் தலைவர்களின் உத்தியோககாலத்தை மூன்று வருடமாக்குவது தமக்குஞ் சம்மதமாமெனக்கூறியுள்ளார். இதுகாலும் இவர்கள் இப்போதுள்ள சட்டத்தின்படி ஒருவருட காலத்துக்கே தெரிவு செய்யப்பட்டனர். சட்டத்தைத் திருத்தியமைத்து உத்தியோக காலத்தை மூன்று வருடமாக்குதற்குவேண்டியவற்பாடுகள் ஆலோசிக்கப் படுகின்றனவெனவும், பிரதமர் கூறுகின்றனர். நகர சபைகள் மூன்று வருடங்கட்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுகின்றன. அவைகள் மூன்று வருடங்களுள் நிறைவேற்றுதற்கெனச் செய்யுந் திட்டங்களை ஒரே தலைவர் நடத்தி நிறைவேற்றுதல், திட்டங்கள் செவ்வனே பூர்த்தியாதற்கு ஏதுவாகுமென்பதே பலருடைய அபிப்பிராயம

இப்போது கடமையாற்றி வரும் நகர தலைவர்களை இவ் விஷயமாக உசாவப்பட்டபோது, யாழ்ப்பாண நகரசபைத் தலைவரொழிந்த ஏனையோர் யாவரும் உத்தியோக காலத்தை மூன்றுவருட மாக்குதற்குச் சார்பாக அபிப்பிராயங் கூறியிருக்கின்றனராம்.

## வேலைக்காரனே? மாணவியோ?

களுத்துறையைச் சேர்ந்த ஹொருன என்னுமிடத்துள்ள ஒரு பளளிக்கூடத்திற் படிக்கும் ஒரு கன்னிகை வேலைக்காரனுக்குரிய உடை தரித்துக்கொண்டு அதேகிராமத்தில் வசிக்கும் தன் காதலனோடு கூடிக்கொண்டு பஸ் தானத்திற் போய்ப் பஸ்ஸில் ஏறிப் பிரயாணஞ் செய்யும் நோக்கத்தோடு நின்றபோது, வேலைக்காரனுடைய தோற்றத்திற் சந்தேகப்பட்ட பொலிஸ் ஒருவர் காதலரிருவரையும் ஒருங்கு நடத்திக்கொண்டுபோய்ப் பொலிஸ்தானத்தில் ஒப்புவிக்க, அவர்கள் சோதித்தபோது வேலைக்காரன்கொண்ட வேடம் மாறுவேட மென்பதைக் கண்டார்களாம். குறித்த கன்னிகையைப் பொலிஸார் அவள் பெற்றாரிடம் ஒப்புவித்தனராம்.

## மருமகளோடு பிணக்குற்றுத் தற்கொலை செய்தாளாம்

கொழும்பிலுள்ள "கிறன்ட்பாஸ்" என்னுமிடத்தில் ஓர் வீட்டில் பொடிகாமினி யென்னும் 65 வயசுவரை சென்ற கிழவியும், அவள்மகனும்மருமகளும்ஒருங்குவசித்து வந்தனர்; ஆனல் மாமியும் மருமகளும் எந்நேரமும் சண்டையிட்டு வந்தார்கள்; ஒருநாள் இருவருஞ் சண்டையிட்டபோது, கிழவி உணவின்றிப் பட்டினியா யிருப்பதை மகன் அறிந்து, விடுதியிற் போய் உண்ணும்படி 1 ரூபாவைத் தாயிடங் கொடுத்தானும்; தாய் அந்த ஒரு ரூபாவையும் வாங்கிக் கொண்டு போய் ஏதும் உணவு பெற்றுண்பதை விடுத்து, 5½ போத்தல் மண்ணெண்ணெயும் ஒரு நெருப்புப் பெட்டியும் வாங்கிக்கொண்டு மீண்டு வந்து எவரும் அறியாதபடி தன்னுடையிலுமுடம்பிலும் மண்ணெய்யை வார்த்துத் தானே தனக்குத் தீப்பற்றவைத்து எரிந்து மாண்டாளாம்.

## நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரி

1-11-51 தொடக்கம் ஷை கல்லூரியின் (Principal) அதிபராக திரு. K. S. ஆனந்தர் B. A., B. O. L. நியமனம்பெற்றுக் கடமையாற்றி வருகிறார்.

—நிரு.

## சிவஞானபோதச் சொற்பொழிவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

படும். என்றால், ஒருவன் தன் கண்ணால் ஒரு பொருளைக் காணும் போது அவனது கண்ணொளியோடு அவனது உயிருணர்வும் அப்பொருளின்பாற் சென்று பற்றுவதால் உயிர், உடலுக்கு வெளியேயும் வியாபித்தல் பெறப்படாதோ எனின், அன்று. ஒருவன் ஒரு பொருளைக் காணும்போது அப்பொருளின்பால் அவனது கண்ணொளியும் சென்று பற்றுவதில்லை. அப்பொருளின் ஒளியே அவனது கண்ணிந்திரியத்திற் சேர்கின்றது. அதனோடு அவ்விந்திரியத்தில் உயிருணர்வும் கூடுவதன்றி வேறில்லை. எனவே உடலுக்கு வெளியே உயிர் வியாபித்தலில்லையென்பதே பெறப்படும். ஆனால் உடலின் கண்ணே வந்து கூடும் பொருள்களை மாத்திரம் உயிர் அறியுங் காரணத்தால், அவ்வுயிர்க்கு அதன் உடலுக்கு வெளியே விளக்கமில்லையென்பது பெறப்படுமேயன்றி, வியாபகமில்லையென்பதும் பெறப்படுமோவெனில் பெறப்படும். உயிர் அறிவாகாரமாய் மாத்திரம் நிற்கும் பொருளாதலால், அதற்கு விளக்கம் வேறு வியாபகம் வேறு என்பதில்லை. எக்காலத்து எங்கே விளங்கி நிற்குமோ, அக்காலத்து அங்கே வியாபித்தலன்றி வேறில்லை. அன்றியும் அறிவாகாரமான பொருளைக் கூறுபடுத்தி அதன் ஒருகூறு விளங்கியும் மற்றொருகூறு விளங்காதும் நிற்கும் என்றலும் பொருத்தமன்று. இவ்வேதுக்களாலும் பிறவேதுக்களாலும் உடலுக்கு வெளியே உயிர்க்கு வியாபகமில்லையென்பதே பொருத்தமாய் முடியும்.

## கடிதங் கொடுப்போன் ஒரேயொருவன்

ஆவென்வலைப் பகுதியைச் சேர்ந்த வட்டுரு என்னுமிடத்தில் "தபாற்கந்தோர்" எனப்படும் உபகடித ஸ்தானம் ஒன்றேயொன்றுண்டாம்; இத்தக் கடிதத்தான மூலமாக அயலிலுள்ள 25 கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வருங் கடிதங்கள் கொடுக்கப்பட வேண்டியனவாம்; நல்ல தெருக்களில்லாமையால் பஸ்கள் மோட்டார் முதலிய வண்டிகளின் போக்குவரத்தும் அரிதாம். இத்தொகையான கிராம வாசிகளுக்குக் கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுக்கும் கடிதச் சேவகனும் ஒருவனும். இப்படி 23 வருடகாலம் நடைபெற்று வருகிறதாம்,

## ஆபத்திற் குதவி செய்யப் போய் உயிரிழந்தார்

சென்றவாரம் எஸ். சீலவதி என்னுமொரு மாணவி, பனிப்பிட்டியா புகைரத ஸ்தானத்தில் வந்து நின்ற புகைரதம் புறப்படத் தொடங்கும் போது ஓடிப்போய் அதன்கண் ஏற முயன்ற சமயத்தில் கால்தவறி விழ்ந்து ஆபத்திற்காளாதலும், அதனைக்கண்டு அங்கே நின்ற டி. சி. இரத்ன நாயகவென்பவர் ஓடிப்போய் அவளைத் தூக்க முயன்றவிடத்துத் தாமும் அடிதவறி விழ்ந்து புகைரதச் சில்லுள் அகப்பட்டுக் காயமுற்று மாண்டனராம்; ஆனால் சிறுமி உடம்பில் ஊறுபட்டதனளெனினும் உயிர் தப்பி விட்டாளாம்.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (11-11-51—17-11-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

சில காலத்திற்குத் தேக சுகத்தைப் பேணவும். எவரோடும் வாதஞ் செய்ய வேண்டாம், அதிக பிரயாசைப்பட்டாற்றான் காத்திருந்த லாபத்தைப் பெறலாம்,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

வருகிற வெள்ளிக்கிழமைக் கிடையில் நிலைதரமான பொருள் வரக்கூடும், எதிரிகளைச் செயிக்க முடியும். பணவரவுண்டு. ஆனல் வாரமுடிவில் அதிகஞ் செலவு செய்ய நேரிடும்,

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இன்னமும் தேகசுகம் வேண்டும். வியாழக்கிழமையின் பின் மன ஆறுதலுண்டு. புதிய கருமங்கள் செய்தற்குச் சனிக்கிழமை அனுகூலமான நாள். எடுத்த கருமங்களை ஊக்கத்துடன் செய்க.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

இத்தக்கிழமை வரவுக்கு மேற்பட்ட செலவு உண்டாகும் உத்தியோகத்திற் பிணக்கு இல்லையேல் சுகயீனம் நேரக்கூடும். பிரதான கருமங்களை இப்போதைக்குச் செய்யாது தவணையிடுக.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

செய்யுங் கருமங்களிற் படுஞ் சிரமத்திற்கேற்ற பயனில்லையாம். வாரத்தின் முதனாளில் ஏதும் பெரும் மாறுதலுண்டாகக்கூடும். சில திருத்தங்கள் உண்டு. ஆனல் அவை நிலையற்றன.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

வருகிற வியாழக்கிழமை வரை சாவதானமாக நடந்துகொள்க, மனச் சஞ்சலம், தேகசுகக் குறைவுண்டு. பண விஷயமாக ஏதும் ஒழுங்கு செய்வதற்குத் தரிதப்பட வொண்ணாது. அடுத்த வாரம்வரை பொறுத்திருக்கவேண்டும்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

எதுங் கருமங்கள் ஒழுங்குபண்ணுவதற்கு இவ்வாரத்தின் முதன் மூன்று நாளுஞ் சிறந்தவை. புதன் தொடக்கம் வெள்ளிக்கிழமை முடிய அவதானமாக நடந்து கொள்க; எஞ்சிய நாட்கள் நல்லன; தேகாரோக்கியமு முண்டு.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இறுதி இரண்டு தினந் தவிர இவ்வாரத்திலே ஏனைய தினங்கள் அநுகூலமானவை. செய்யும் முயற்சியை ஊக்கிச் செய்க. வாரமுடிவில் இனசனம் காரணமாகச் சிறிது சீற்றமுஞ் சஞ்சலமும் நேரக்கூடும்,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

இந்த வாரம் அதிக சிரமப்பட்டால் அனுகூலமடையலாம். கிழமை மத்தியிற் சில சிநேகிதராலுதவியுண்டு. தூரதேசத்திலிருந்து நல்ல செய்தியும் எதிரிகள் மேல் வெற்றியுமுண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

குடும்ப விஷயம் வெகு கஷ்டத்தோடு கூடியதாயிருக்கும். கடன் கொடுப்பதையும் வாங்குவதையும் தவிர்த்துக் கொள்க, நண்பரைத் தஞ்சமென நம்பற்க. வெள்ளிக் கிழமைக்குப் பின் சிறிது ஆறுதலுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3-ம் பாதம்

இத்தவாரம் தீர்க்கமற்றதும் சஞ்சலத்தோடு கூடியதுமாம். ஆனல் செய்யும் முயற்சியில் லாபமுண்டு. மன ஆறுதலில்லை. வெள்ளிக்கிழமையின்பின் ஒருவாறு நன்மையுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

சில கருமங்களை நிறைவேற்றவேண்டுமென்ற வேணவா இவ்வாரத்திற் பூர்த்தியாகும். ஆனாலும் வெள்ளிக்கிழமை வரை அவதானமாக நடந்துகொள்க. வாரமுடிவிற் சில மங்களசெய்தி கிட்டும்.

## சைவக் குருமாரைப் பயிற்றும் ஸ்தாபனம்

சைவக் குருமார்களைப் பயிற்றுதற்கான ஒரு சிறந்த ஸ்தாபனத்தை நிறுவுதற்கு உத்தேசித்து அதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்யும் நோக்கமாகச் சென்ற வாரம் கொழும்பில் திரு. S. நடேசபிள்ளையின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இவ் விஷயத்தில் ஆகவேண்டிய உதவிகள் செய்யும் பொருட்டு கோவில்களைப் பரிபாலிக்கும் சபையார் தனித்த முறையிற் கோயில்களை நடத்தும் அதிகாரிகள், சைவசமயக் குருக்கண்மார் பலருக்குக் கடிதங்கள் எழுதவேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. இப்படியான ஒரு ஸ்தாபனம் நிறுவும பட்சத்தில் தாமும் ஒரு பதினாயிரம் ரூபா நன்கொடை உதவுவதாக ஒரு அன்பர் வாக்களித்துள்ளார். —நிரு.

## தினவரவு இடாப்பு

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பலர் பிரேரித்தபடி எங்கள் தினசரி இடாப்புக்கள் உயர்ந்த காகிதத்திற் சிறந்த முறையில் அச்சிட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

விலை ஒன்றரை ரூபா.

மனேஜர்

சைவப்பிரகாச யந்திரசாலை

யாழ்ப்பாணம்.

## ஆசிரியர் தேவை

திருக்கோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலய மகளிர் கலாசாலைக்கு, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியை தேவை. விடுதிச் சாலைச் சௌகரியங்களுண்டு. எமக்குத் தெரிவிக்கவும்.

மனேஜர்

ஸ்ரீசண்முகவித்தியாலயம்

திருக்கோணமலை.

M. 132 9, 13, 16—1951.

## மரம் விழ்ந்து மாஸ்டர்

நல்லூர்ச் செங்குந்தர் வித்தியாசாலை உபாத்தியாயராகிய திரு. T. S. சுப்பிரமணியமென்பவர், சென்றவாரம் தேசாதிபதி இலங்கை வந்தவிடத்து நடந்த உபசாரணைக் கொண்டாட்டத்திற்குச் சென்று மீண்டு வீட்டிற்கு வரும் மார்க்கத்தில், கச்சேரி - நல்லூர் தெருவோரத்தில் நின்ற ஒரு பெருமரத்தின் கொம்பர் சடுதியில் முரிந்து உபாத்தியாயர் மீது வீழ்ந்தமையினால் அவர் உயிர் துறந்தார்; இவருடன் சென்ற திரு. C. விஜயமென்னும் இன்னொரு உபாத்தியாயர் சிறிது ஊறுடன் உயிர் தப்பினர்; இருவரும் துவிசக்கரத்திற் சென்றவர்கள்,

## பஸ் பிரயாணிகள்

பஸ் மார்க்கமாகப் பயணஞ் செய்வோர், தாம் தாம் போய்ச் சேரவேண்டிய ஸ்தானங்களுக்குப் போய்ச் சேர்வதற்கிடையில, பஸ்ஸிற்கு ஏதும இடையூறு நேர. அதனால் அவர்களுடைய பயணந் தடைப்படுமானல், தாந்தாம் கொடுத்த பிரயாணக் கூலியைப் பஸ் காரியஸ்த (கண்டக்ர) ரிடம் மீட்டுப் பெற்றுக் கொள்ளப் பிரமாண முண்டாம்; அவர் திருப்பிக்கொடுக்க மறந்தால், பஸ்ஸை வைத்து நடத்துஞ் சமுதாய அதிபரிடம் முறையிட்டுப் பெற்றுக் கொள்ளலாமாம; அவரும் மறுத்தால், மோட்டார்ப்பகுதிக் கமிஷனரிடம் தெரிவித்துத் தம் பணத்தைப் பெறுதற்கு வழிதேடலாமாம்.

## ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி நவம்பர் 10**

காலை 7 10 கீதாரம்பம்* டி கே பட்டம்மாள் 7 15 தமிழில் செய்தி 7 30 சிதம்பரம் டி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்தி 2 10 ஆங்கிலத்தில் பேச்சு 2 25 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 ஜே எம் அப்துல்கனி குத்ரபீன் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மஹாராஜபுரம் விஸ்வநாதையர் பாட்டு ஆர் கே வெங்கடராம சாஸ்திரி வயலின் மதராஸ் ஏ கண்ணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச் சொல் கேளீர் 9 30 பன்னாலால்தாஸ் விதார் ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு நவ 11**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி குடும்ப நிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 வாத்ய இசை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வளம்* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசை நிகழ்ச்சி ஆ இ ரே வித்வான்கள் 3 முடிவு.

மாலை 5 30 எஸ் நரஸம்மா வீணை 5 45 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 பெயர் விநோதம் வி எஸ் கமலபதி —பேச்சு 8 ஸ்ரீவைகுண்டம் என் பரமசிவம்பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 எஸ் நரஸம்மா வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் நவ. 12**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 டல்லாக்குழல்* 2 தமிழில் செய்தி 2 10 திமிர்பாரன் வாத்யகோஷ்டி* 2 15 உயர்தர பாடசாலைகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 திருப்பாப்புலியூர் வி. ராஜம் ஐயர் வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 காளிதாஸர் கண்ட பெண்ணரசிகள் வி கோபால ஐயங்கார் —பேச்சு 8 திருப்பாப்புலியூர் வி. ராஜம் ஐயர் வயலின் 8 30 குரல்வளம்* 8 45 ஆங்கிலப் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கண்டதேவி எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் நவ 13**

காலை 7 10 கீதாரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 சரோஜினி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 டி சௌடையா வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 முகம்மது ஷகூர்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 திருச்சேறை கல்யாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 என் சுப்பிரமணியம் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மன்னார் குடி கே சாவித்ரி அம்மாள் கோட்டு வாத்யம் பாபநாசம் ஏ பாலசரஸ்வதி வயலின் திருத்துறைப்பூண்டி கிருஷ்ணமூர்த்தி பிள்ளை மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருச்சேறை கல்யாணசுந்தரம் சகோதரர்கள் நாகஸ்வரம் 10 முடிவு.

# கொழும்பு விவேகானந்த சபை

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்தப் பரிசு

இவ்வாண்டு கார்த்திகை மாதத்தில் வரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தன்று மாணவ மாணவிகளுக்கு இச்சபையினரால் பின்வரும் திட்டத்துக்கு அமையப் பரிசுகள் நாவலர் பெருமான் ஞாபகார்த்தமாக வழங்கப்படும்.

க. பேச்சுவன்மைப் பரிசு — நான்கு
உ. கட்டுரை எழுதுதற்குரிய பரிசு — ஒன்று.

2. இத்திட்டத்தை உசிதம்போல மாற்றவோ திருத்தவோ சபையாருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

3. இவ்விஷயம் பற்றிய கடிதங்கள் யாவும் பரீக்ஷா காரியதரிசிக்கு விலாசமிடப்பட்டு, உறையின் வெளிப்புற இடப்பக்கத் தலைப்பில் 'நாவலர் பரிசு' எனக் குறிப்பிடல் வேண்டும்.

4. திட்டத்திற் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பிந்திக்கிடைக்கும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### பரிசுத் திட்டம்

#### க. பேச்சு வன்மைப் பரிசு

1. 15 முதல் 19 வயதுவரை உள்ளவர்க்கு — 2 பரிசுகள். க-ம் பரிசு பெறுமதி ரூ. 25/= உ-ம் பரிசு ரூ. 12/50. 12 முதல் 15 வயதுவரை உள்ளவர்க்கு — 2 பரிசுகள். க-ம் பரிசு பெறுமதி ரூ. 15/= உ-ம் பரிசு ரூ. 7/50.

2. இப்பரிசுகுரிய தேர்விற் கலந்துகொள்ள விரும்புவோர் நவம்பர் 20-ம (20-11-51) தேதிக்குப் பிந்தாது தமது பெயரைச் சபையின் பரீக்ஷா காரியதரிசியிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும். பதிவு செய்தற்குப் பின்வரும் விபரங்களும் கொடுக்க வேண்டும்.

(1) முழுப்பெயர் (2) பிறந்த திகதி (3) வித்தியாசாலை (4) மேல் வரும் 4-ம் விதியின் பிரகாரம் தெரிந்திருக்கும் பேச்சு (5 இவற்றிற்கு மாணவரது வித்தியாசாலைத் தலைமை ஆசிரியரது அத்தாக்ஷி.

3. பேச்சுவன்மைத் தேர்வு (1-12-51) டிஸம்பர் 1-ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்குக் கொழும்பில் சபை மண்டபத்தில் நடைபெறும். இவ்வொழுங்கில் ஏதாவது மாற்றமிருப்பின் தேர்விற் கலந்து கொள்பவர்க்கு 3 நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்படும்.

4. இத்தேர்விற் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரும் தம் பேச்சிற்கு நாவலர் அவர்களது கட்டுரைகள், பிரசங்கங்கள் ஆதியனவற்றிலிருந்து ஒரு பகுதியைத் தெரிந்து ஐந்து நிமிஷங்களுக்கு மேல் நீடிக்காது பேச வேண்டும். தாம் தெரிந்துகொண்ட பகுதியைத் தம் பெயரைப் பதிவு செய்யும்போது குறிப்பிட வேண்டும்.

5. பரிசு பெறுவோர் சபை மண்டபத்தில் நடைபெறும் நாவலர் குருபூசையின்போது தம் பிரசங்கத்தைச் செய்து பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதுபற்றிய விபரம் தேர்வின் இறுதியில் அறிவிக்கப்படும்.

#### உ. கட்டுரை எழுதுதற்குப் பரிசு

1. 15 முதல் 19 வயது வரையுள்ள மாணவருக்கு ஒரு பரிசு. [-பெறுமதி ரூபா 25/=.

2. கட்டுரை பின்வரும் விஷயங்களுள் ஒன்றுபற்றி 1500 சொற்களுக்கு (ஏறக்குறைய (foolscap) பூல்ஸ்காப் தாளில் ஏறக்குறைய 5 பக்கங்களுக்கு) மேற்படாதிருக்க வேண்டும்.

(க) நாவலர் வளர்த்த தமிழ்
(உ) நாவலரும சைவ சமயமும்
(ங) சமயக் கல்வி.

3. ஒரு மாணவரிடமிருந்து ஒரு கட்டுரை மாத்திரம் ஏற்கப்படும். அது மாணவரது சொந்த முயற்சியாக இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாகத் தம சொந்த எழுத்தில் எழுதிய இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்.

4. மாணவரது முழுப்பெயர், வயது, வித்தியாசாலை, மாணவரது சொந்த முயற்சி என்பனவற்றை வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஒரு பிரதியில் உறுதிப்படுத்தல் வேண்டும்; மறு பிரதியில் எவ்வித விபரமும எழுதக்கூடாது.

5. கட்டுரைப் பிரதிகள் நவம்பர் 16-ம் திகதி (16-11-51) க்குப் பிந்தாது கிடைக்க ரிஜிஸ்டர் தபாலில் அனுப்ப வேண்டும்.

6. சபை மண்டபத்தில் நடைபெறும் நாவலர் குருபூசையின்போது பரிசு பெறுபவர் தமது கட்டுரையை வாசித்துக் காட்டிப் பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டும் இதுபற்றிய விபரம் நேரில் அறிவிக்கப்படும்.

34 மேட்டுத் தெரு
கொழும்பு-13
31 - 10 - 51.

ஸ்ரீ. சண்முகநாதன்
கௌரவ பரீக்ஷா காரியதரிசி.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
இஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
குணிமார்க் ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
Std 2 யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எசசிந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்,
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49 சிருப்பர்.

சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் நீங்கி, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50
கால்றுத்தல் விலைரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

சிவஞான பற்பொடி
சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமதுவிலாசம் நி 3/1 தட்டாதெரு
M 92 கோட்டைமுனை, மட்டக்களப்பு

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Peraknsa Press, Vannarpannai, Jaffna, on Friday November 9, 1951